தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்
31.12.2012 A.M

## வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்துக்கு ரூ.72 கோடி மானியம் : முதல்வர் உத்தரவு



வேளாண்மை கூட்டுறவுச் சங்க நிதி நிலையை சீராக்க ரூ.72 கோடி மானியம் வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து ஞாயிற்றுக்கிழமை தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

""கூட்டுறவே நாட்டுயர்வு என்ற ஆன்றோர் மொழிக்கு ஏற்ப தமிழ்நாட்டின் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், கிராமப்புற மக்களுக்கு கடன் உதவி அளித்தல், விவசாய விளை பொருள்களை விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், இடுபொருள், நுகர்பொருள் ஆகியவற்றை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகிய பல்வேறு இன்றியமையாப் பணிகளை கூட்டுறவு வங்கிகள் மற்றும் வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. தமிழ்நாட்டின் கிராமப் பொருளாதார வளர்ச்சியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அரும் பணியாற்றி வருகின்றன.

பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் பெறப்படும் மறு நிதி ஆகியவற்றின் மூலம் பெறும் நிதி ஆதாரத்தினைக்

கொண்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதியுதவி அளித்து வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா கடன்கள் வழங்குவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும்.

வேளாண் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிதி நிலைமையைச் சீராக்க, சென்ற ஆண்டு மானியமாக 82 கோடியே 54 லட்சத்து 57 ஆயிரத்து 662 ரூபாயை விடுவிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

தற்போது மாநில அரசின் பங்காக 23 தகுதியுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மானியமாக 1 கோடியே 87 லட்சத்து 82 ஆயிரத்து 119 ரூபாயும், ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய நான்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு மானியமாக 70 கோடியே 20 லட்சத்து 70 ஆயிரத்து 191 ரூபாயும் ஆக மொத்தம் அரசு மானியமாக 72 கோடியே 8 லட்சத்து 52 ஆயிரத்து 310 ரூபாயை விடுவிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் குறுகிய கால கடன்கள் வழங்கும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் பணிகள் புனரமைக்கப்பட்டு, வங்கிகளின் பணிகள் மேன்மை அடைவதுடன் விவசாயிகளின் நலனும் பாதுகாக்கப்படும் என்று அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் மழை தொடரும் : வானிலை மையம் தகவல்

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் திங்கள்கிழமை (டிசம்பர் 31) பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு இலங்கைக் கடல் அருகில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது தற்போது தமிழகம், தென் ஆந்திரக் கடலின் தென்மேற்கு பகுதியில் நிலை கொண்டுள்ளது.

தமிழகத்துக்கு அருகில் காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடிப்பதால் இரு நாள்களாக மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி மாநிலத்திலேயே

அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் 300 மில்லிமீட்டர் மழையும், மணிமுத்தாறில் 230 மில்லி மீட்டர் மழையும் பதிவானது. தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் கணிசமாக அளவு மழை பெய்துள்ளது.

இந்நிலையில் திங்கள்கிழமையும் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரு சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என வானிலை மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் - 300., மணிமுத்தாறு - 230., ஸ்ரீபெரும்புதூர் - 80., திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் - 70., கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை, திருவள்ளூர் மாவட்டம் சோழவரம், செங்குன்றம், திருவலங்காடு, பூந்தமல்லி, செங்கல்பட்டு, தேனி மாவட்டம் பெரியகுளம் - 50., திருவள்ளூர் மாவட்டம் பூண்டி, திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி, சென்னை, காஞ்சிபுரம் - 40., திருவண்ணாமலை மாவட்டம் போளூர், தேனி மாவட்டம் போடிநாயக்கனூர், கொடைக்கானல் - 30.

## மண்புழு உரம் தயாரிப்புப் பயிற்சி

உடன்குடி வட்டாரம் பெரியபுரம் கிராமத்தில் 100 விவசாயிகளுக்கு மண் புழு உரம் தயாரித்தல் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊராட்சித் தலைவர் கமலம்மாள் தலைமை வகித்தார். உடன்குடி வேளாண் உதவி இயக்குநர் பாரதி முன்னிலை வகித்தார்.

தூத்துக்குடி வேளாண் அலுவலர் (தரக்கட்டுப்பாடு) ந. மலர்விழி மண்புழு உரம் தயாரிப்பு குறித்து செயல்விளக்கம் அளித்தார்.

விவசாய ஆர்வலர் குழுக்கள் மண்புழு உரம் தயாரித்து, விற்கலாம் எனஉடன்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் பாரதி கூறினார். வேளாண் அலுவலர் சுஜாதா, துணை அலுவலர் சாகுல் ஹமீது, உதவி அலுவலர்கள் ஏ. மணி, செல்வம், மில்கிசேதேக், விவசாயிகள் பங்கேற்றனர்.

## இயந்திரம் மூலம் பருத்தி அறுவடை :

தருமபுரி மாவட்டத்தில் இயந்திரம் மூலம் பருத்தி அறுவடை செய்வது குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டதாக தருமபுரி உழவர் பயிற்சி நிலையத்தின் வேளாண்மை துணை இயக்குநர் மேகநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகள் குளிர்கால பருத்தி அறுவடையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கூலியாள்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், பேட்டரியால் இயங்கும் பருத்திப் பஞ்சு எடுக்கும் கருவியை விவசாயிகளிடையே வேளாண்மைத் துறை அறிமுகப்படுத்தி வருகிறது.

நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி, மொரப்பூர் வட்டம், ஜடையம்பட்டி, ஆண்டிப்பட்டி, தொங்கனூர், கேத்திரெட்டிப்பட்டி, கதிர்நாயக்கனஹள்ளி ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு இயந்திரம் மூலம் பருத்தி அறுவடை செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

கூலியாள்கள் மூலம் பருத்தி அறுவடை செய்யும் போது ஒரு ஆள் சுமார் 20 கிலோ பஞ்சு மட்டுமே எடுக்க முடியும். இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் போது சுமார் 60 கிலோ அறுவடை செய்ய முடிகிறது.

மேலும், இயந்திரம் மூலம் அறுவடை செய்த பஞ்சுகளில் தூசுகள் இன்றி சுத்தமாகவும், தரமானதாகவும் உள்ளது. இந்தக் கருவியின் மூலம் பருத்தியை அறுவடை செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு செலவு குறையும். இந்தக் கருவி ரூ.6,000 மதிப்பில் சந்தையில் கிடைக்கிறது. நிகழாண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 25 சத மானிய விலையில் 10 கருவிகள் விநியோகிக்கப்பட உள்ளன என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

## மாவட்டத்தில் 517 மி.மீ. மழை

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 517 மி.மீ மழை பதிவாகி உள்ளது.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையால் திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் சனிக்கிழமை தொடர் மழை பெய்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி நிலவரத்தின்படி பதிவான மழை அளவு:

பொன்னேரி-10.2, ஊத்துக்கோட்டை-19, பள்ளிப்பட்டு-16, கும்மிடிப்பூண்டி-25, திருத்தணி-19, திருவள்ளூர்-46, பூந்தமல்லி-48, அம்பத்தூர்-40, பூண்டி-39.6, செம்பரம்பாக்கம்-42.5, சோழவரம்-53, தாமரைப்பாக்கம்-51, ஆர்.கே.பேட்டை-10, திருவாலங்காடு-49, செங்குன்றம்-49, மொத்தம்-517.

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் மேகமூட்டம் காணப்பட்டது. சில இடங்களில் லேசான மழைதூறல் இருந்தது.

**பயிர்க் காப்பீடு விண்ணப்பம் வழங்க பல்வேறு நிபந்தனைகள் : அமைச்சருக்கு கடித ம்**

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் தமிழக முதல்வர் அறிவித்துள்ள பயிர் காப்பீடுத் திட்டத்தில் கூட்டுறவு வேளாண் சொசைட்டியில் விண்ணப்பங்களை அளித்திட பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளதால் விவசாயிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

÷நிபந்தனைகளை தளர்த்த வேண்டும் என சிதம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் வேளாண்துறை அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.÷கடித விவரம்: தமிழக முதல்வர் காவிரி பாசனப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சாகுபடி இழப்பை ஈடு செய்ய அனைத்து விவசாயிகளையும் பயிர் காப்பீட்டு பதிவு செய்து பயன்பெறும் திட்டத்தை அறிவித்துள்ளார்.÷விவசாயிகளுக்கு நல்ல பயன் தரும் இத்திட்டத்தில் விவசாயிகள் கூட்டுறவு சொசைட்டியில் அடங்கல் சான்றிதழுடன் விண்ணப்பம் அளித்தால், தேவையற்ற சான்றுகளை கேட்டு மனுக்களைப் பெற மறுக்கின்றனர்.÷குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் பட்டா சான்றிதழ், குத்தகை சாகுபடியாக இருந்தால் குத்தகை பத்திரம் உள்ளிட்ட சான்றுகளை கோருகிறார்கள்.

÷ஏற்கெனவே கடன் பாக்கியுள்ள விவசாயிகள் பாக்கி முழுவதையும் செலுத்த வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றனர். இதர மாவட்டங்களில் அனைத்து விவசாயிகளிடமும் மனுக்கள் பெற்று பதிவு செய்யும் நிலையில், கடலூர் மாவட்டத்தில் மட்டும் இந்த நிலை கடைபிடிக்கப்படுவதால் விவசாயிகள் பெரும் வேதனையில் உள்ளனர்.

÷டிசம்பர் 30-ம் தேதிக்குள் மனுக்கள் பதிவு செய்ய முடியாமல் போய் விடுமோ? என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

÷எனவே பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேருவதற்கு அனைத்து விவசாயிகளின் மனுக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், தேவையிருந்தால் பின்னர் அவைகளை சரிபார்த்துக் கொள்ளலாம் என கூட்டுறவு அதிகாரிகளுக்கு உரிய உத்தரவை வழங்க வேண்டும் என கடிதத்தில்

கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.சிதம்பரம், டிச. 29: சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் தமிழக முதல்வர் அறிவித்துள்ள பயிர் காப்பீடுத் திட்டத்தில் கூட்டுறவு வேளாண் சொசைட்டியில் விண்ணப்பங்களை அளித்திட பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளதால் விவசாயிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

÷நிபந்தனைகளை தளர்த்த வேண்டும் என சிதம்பரம் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் வேளாண்துறை அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.÷கடித விவரம்: தமிழக முதல்வர் காவிரி பாசனப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சாகுபடி இழப்பை ஈடு செய்ய அனைத்து விவசாயிகளையும் பயிர் காப்பீட்டு பதிவு செய்து பயன்பெறும் திட்டத்தை அறிவித்துள்ளார்.÷விவசாயிகளுக்கு நல்ல பயன் தரும் இத்திட்டத்தில் விவசாயிகள் கூட்டுறவு சொசைட்டியில் அடங்கல் சான்றிதழுடன் விண்ணப்பம் அளித்தால், தேவையற்ற சான்றுகளை கேட்டு மனுக்களைப் பெற மறுக்கின்றனர்.÷குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் பட்டா சான்றிதழ், குத்தகை சாகுபடியாக இருந்தால் குத்தகை பத்திரம் உள்ளிட்ட சான்றுகளை கோருகிறார்கள்.

÷ஏற்கெனவே கடன் பாக்கியுள்ள விவசாயிகள் பாக்கி முழுவதையும் செலுத்த வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றனர். இதர மாவட்டங்களில் அனைத்து விவசாயிகளிடமும் மனுக்கள் பெற்று பதிவு செய்யும் நிலையில், கடலூர் மாவட்டத்தில் மட்டும் இந்த நிலை கடைபிடிக்கப்படுவதால் விவசாயிகள் பெரும் வேதனையில் உள்ளனர்.

÷டிசம்பர் 30-ம் தேதிக்குள் மனுக்கள் பதிவு செய்ய முடியாமல் போய் விடுமோ? என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

÷எனவே பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேருவதற்கு அனைத்து விவசாயிகளின் மனுக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், தேவையிருந்தால் பின்னர் அவைகளை சரிபார்த்துக் கொள்ளலாம் என கூட்டுறவு அதிகாரிகளுக்கு உரிய உத்தரவை வழங்க வேண்டும் என கடிதத்தில் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## விலையில்லா கால்நடைகளுக்கு நாளை சிறப்பு மருத்துவ முகாம்

தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு திங்கள்கிழமை அந்தந்த கிராமங்களில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறும் என்று கடலூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சார்பில் சனிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கை:

÷தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் திட்டம் 9.7.2011 அன்று துவக்கப்பட்டது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் 2011-12-ம் ஆண்டில் 900 கறவைப் பசுக்களும், 15,752 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 2012-13-ம் ஆண்டிற்கு இதுவரை 799 கறவைப் பசுக்களும், 19,124 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கால்நடைப் பராமரிப்புத்துறை கால்நடை உதவி மருத்துவர்கள், அலுவலர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள திட்ட கிராமங்களில் சிறப்பு முகாம் மேற்கொள்ள உள்ளனர்.

அதன்படி கடலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை (31) சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. அதனால், இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள் தங்கள் கால்நடைகளை தவறாது கொண்டு வந்து கால்நடை மருத்துவர்களிடம் காண்பித்து கால்நடைகளின் நலனைக் காக்க வேண்டும் என அறிக்கையில் ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு கிராமப்புறப் பயிற்சி

பழனி அருகே வாகரை மக்காச் சோள ஆராய்ச்சி மையத்தில் வெள்ளிக்கிழமை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் நிதி உதவியோடு, பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, மக்காச் சோள ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்துறை இணைந்து மக்காச் சோள உற்பத்தியில் அதிக வருமானம் ஈட்டுவதற்கான தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சியை விவசாயிகளுக்கு வழங்கியது. நிகழ்ச்சிக்கு பழனியாண்டவர் கல்லூரி முதல்வர் பிரபாகரன் தலைமை வகித்தார்.

மக்காச்சோள ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் சேதுராமன், கோவை வேளாண் பல்கலைக்கழக சிறு தானியங்கள் துறை தலைவர் ரவிகேசவன், தொப்பம்பட்டி ஒன்றிய வேளாண் உதவி இயக்குநர் ரமேஷ்பாபு, பழனி வேளாண் அலுவலர் காளிமுத்து ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று பேசினர்.

மக்காச் சோள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கார்த்திகேயன், பாரதி, அறிவுடைநம்பி ஆகியோர் மக்காச் சோள உற்பத்தியில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை திட்ட ஒருங்கிணைப்பாளர் காண்டீபன் செய்திருந்தார்.

முகாமில் பேராசிரியர்கள் ஜோதீஸ்வரன், ராஜவர்மன், மோகன், மணிகண்டன் மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

## மானிய விலையில் உரங்கள் வழங்கல்

தமிழக வேளாண்மைத் துறையின் மூலம் மானிய விலையில் வழங்கப்படும் விவசாய வளர்ச்சித் திட்டங்களுக்கான இடுபொருள்களை சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பழனிச்சாமி வழங்கினார்.

வடமதுரை வட்டம் தென்னம்பட்டி கிராமத்தில் வடமதுரை வட்டார வேளாண்மை துறை அலுவலகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் வேடசந்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பழனிச்சாமி பங்கேற்று விவசாயிகளுக்கு பயிர்களுக்கான இடுபொருள்களை வழங்கினார்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயிர் நுண்ணூட்ட உரங்களும், உலக வங்கி நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் மக்காச்சோள வீரிய ஒட்டுரக விதைகளும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும் மத்திய அரசின் அட்மா திட்டத்தின் மூலமாக பயிர்பாதுகாப்பு மருந்துகள், உரங்கள், கைத்தெளிப்பான் கருவிகள், விதைத்தெளிப்பான் கருவிகளும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

## பவானிசாகர் மீன்வளப் பண்ணையில் அமைச்சர் ஜெயபால் ஆய்வு

பவானிசாகர் மீன்வளப் பண்ணைக்கு நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 19.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ.ஜெயபால் சனிக்கிழமை தெரிவித்தார்.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள பவானிசாகர் அரசு மீன்வளப் பண்ணை, மீன் விற்பனை நிலையம், பழைய மீன் பண்ணை அணை நீர்ப்பிடிப்பு பகுதி ஆகிய இடங்களை மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ.ஜெயபால் சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

மேலும் கூடுதல் மீன் பண்ணை அமைக்கும் இடங்களைப் பார்வையிட்ட பின், அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

உள்நாட்டு மீன்வளர்ச்சிப் பணிகளுக்காக அளித்துள்ள ரூ. 35 கோடி நபார்டு நிதியில் இருந்து பவானிசாகர் மீன்வளப் பண்ணைக்கு ரூ. 19.13 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நடப்பாண்டு 754 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

வரும் ஆண்டில் இதனை 1,500 லட்சமாக உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான அடிப்படைக் கட்டடமைப்பு வசதிகள், கூடுதல் பண்ணைகள், கட்டடங்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டது என்றார்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஊராட்சித் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், பவானிசாகர் எம்எல்ஏ பி.எல்.சுந்தரம், மீன்வளர்ச்சிக் கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வேளா ண் துறை மறுசீரமைப்பால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது**

வேளாண்மைத் துறை மறுசீரமைக்கப்படுவதன் மூலம் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது என்று வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம் சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற தொழில்நுட்பக் கையேடு வெளியீட்டு விழாவில் அவர் பேசியது:

வேளாண்மைத் துறையை மேம்படுத்த உற்பத்தியை இரண்டு மடங்காகவும், வருவாயை மூன்று மடங்காக உயர்த்திட திட்டங்கள் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகம் கடந்த ஆண்டில் 1.05 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை மேற்கொண்டு தேசிய அளவில் முதல் இடத்தை பிடித்துள்ளது.

வேளாண்மைத் துறையை மற்ற மாநிலங்கள் திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது. வேளாண்மை உற்பத்தியை பெருக்கிட புதிய திட்டங்கள், புதிய தொழில்நுட்பங்களை தமிழக அரசு அறிமுகப்படுத்தி வருகிறது.

உழவர் பெருவிழாவை நடத்தி உணவு உற்பத்தியை பெருக்கிட விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயப் பணிகளை மேம்படுத்தி பாதிப்பின் அறிகுறிகள் இல்லாத அளவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்படும் டெல்டா பகுதி விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு முதல்வர் உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடினர். இருப்பினும் குறைந்தளவு தண்ணீர் மட்டுமே தமிழகத்திற்கு கிடைத்தது. இந்நிலையில், புதிய திட்டங்கள் மூலம் உற்பத்தியை பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண்மைத் துறை ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு கடந்த ஒன்றரை ஆண்டில் 213 ஜீப்கள் வழங்கப்பட்டுள்ளன. இதே போல கூடுதல், இணை, துணை மற்றும் உதவி இயக்குநர் ஆகியோருக்கு இரண்டு முறை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் கடந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீது இறுதித் தீர்வை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொப்பரை தேங்காய் வழக்கில் விரைவில் தீர்வு ஏற்படும். வேளாண்மைத் துறையை மறுசீரமைப்பு செய்யும் போது யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

மேயர் செ.ம.வேலுசாமி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி, சட்டப்பேரவை உறுப்பினர் சேலஞ்சர் துரை, மாவட்ட ஊராட்சி தலைவர் ஆர்.கனகராஜ், விவசாயகள் சங்கத் தலைவர் வேட்டவலம் கே.மணிகண்டன், விதைச்சான்று துறை இயக்குநர் பாலகிருஷ்ணன், வேளாண்மை பட்டதாரிகள் சங்கத் தலைவர் தா.ஸ்டேன்லி, செயலர் பா.சுரேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

### ஒரு ஏக்கர் வருமானத்தில் 50% தொகையை பயிர்க் கடனாக வழங்க வேண்டும்

ஒரு ஏக்கரில் கிடைக்கும் மொத்த வருமானத்தில் 50 சதவீத தொகையை பயிர்க் கடனாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் விவசாயிகள் சங்கம் (கட்சி சார்பற்றது) தலைவர் வழுக்குப்பாறை பாலு, பொதுச் செயலாளர் பி.கந்தசாமி ஆகியோர் பேசியது:

விவசாயிகளுக்கான பயிர்க் கடன் வழங்குவதில் நபார்டு வங்கி புதிய நடைமுறையைக் கொண்டு வந்துள்ளது. அதன்படி ஏக்கருக்கு ரூ.1.20 லட்சம் மொத்த வருவாய் பெறும்பட்சத்தில் ரூ.40 ஆயிரம் கடன் வழங்கப்படும். மீதமுள்ள தொகையை விவசாயிகளே முதலீடு செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் பெற முடியாது. எனவே, மொத்த வருமானத்தில் 50 சதவீத தொகையை பயிர்க் கடனாக வழங்கிட வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து, மாவட்ட வருவாய் அலுவலர் க.கற்பகம், மொத்த வருமானத்தில் 50 சதவீத தொகையை பயிர்க் கடனாக வழங்குவது தொடர்பாக மாவட்ட முன்னோடி வங்கி மூலம் நபார்டு வங்கிக்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

தொடர்ந்து விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பேசியது:

வாலாங்குளத்தில் வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை வளாகத்தில் உள்ள டீக்கடையை அகற்றிட வேண்டும்.
நாச்சிபாளையத்தில் உள்ள கல்குவாரியை நடத்த அனுமதி வழங்கக் கூடாது.

பேரூர் ஏழு வாய்க்கல் பகுதியில் சிறிய அளவில் கழிவுநீர் சுத்திகரிப்பு பண்ணை அமைக்க வேண்டும். இதன் மூலம் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து விவசாயிகள் பயன்படுத்த முடியும் என்று தெரிவித்தனர்.

## வறட்சியால் பாதித்த பயிர்களுக்கு இழப்பீடு

தருமபுரியை மாநில அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கும்பட்சத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ப.ராமர் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

பூவல் மடுவு முதல் கெட்டுப்பட்டி வரையிலான பழுதடைந்த தார்சாலை விரைவில் சீர் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

## வங்கிகளிடம் ரூ.25,000 கோடி கடன் கேட்கிறது மத்திய உரத் துறை அமைச்சகம்

மானியம் வழங்குவதற்காக பொதுத்துறை வங்கிகளிடம் இருந்து ரூ.25 ஆயிரம் கோடி கடன்பெற மத்திய உரத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் உரத் துறை மானியம் ரூ.1,04,000 கோடி அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து வங்கித் துறை சிறப்பு ஒப்பந்தத்தின் மூலம் ரூ.25 ஆயிரம் கோடி அளவுக்கு கடன் பெற மத்திய நிதியமைச்சகத்தின் ஒப்புதலை உரத் துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.பொட்டாஷ், டை அமோனியம் பாஸ்பேட் ஆகிய உரங்களுக்கான மானியத்தை கடந்த ஜூலை மாதம் முதலும், யூரியாவுக்கான மானியத்தை கடந்த ஆகஸ்ட் மாதம் முதலும் உரத்துறை அமைச்சகம் செலுத்தவில்லை என்று உரத்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.ஆனால் இது தொடர்பாக அதிகாரப்பூர்வமாக பதிலளிக்க உரத்துறை அமைச்சக அதிகாரிகள் மறுத்துவிட்டனர். எனினும், பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட ரூ.61,256 கோடியை

உரத்துறை அமைச்சகம் ஏற்கெனவே செலவிட்டுவிட்டது. மானியங்களைச் செலுத்த கூடுதல் நிதி தேவைப்படுகிறது என்று அத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில், உரத்துறையிடம் இருந்து மானியம் கிடைக்காததால் நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தொழில் அமைப்பான இந்திய உர நிறுவனங்களின் கூட்டமைப்பு கூறியுள்ளது. உரத் தொழில்துறையில் காக்க ரூ.40 ஆயிரம் கோடி வரை அவசரமாகத் தேவைப்படுகிறது.அது கிடைக்காத பட்சத்தில் இத்துறையே முற்றிலுமாக முடங்கி, விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டு விடும். எனவே இதுபோன்ற சமயங்களில் பொதுத்துறை வங்கிகளின் உதவியைத்தான் நாட வேண்டியிருக்கும். 2008-09ஆம் ஆண்டில் உர நிறுவனங்களுக்கு உதவ இதேபோன்ற நடைமுறை பின்பற்றப்பட்டது என்று உர நிறுவனங்களின் கூட்டமைப்பின் இயக்குநர் சதீஷ் சந்தர் கூறியுள்ளார்.

**குறுவை , சம்பா  சாகு படி  பாதிப் புக்கு  அதி முக , திமு கவே  கார ணம் :  ராம தாஸ்**



டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா சாகுபடி பாதிப்புக்கு அதிமுக, திமுக கட்சிகளே கார ணம் என பாமக நிறுவனர் ராமதாஸ் குற்றஞ்சாட்டினார்.

கும்பகோணத்தில் சனிக்கிழமை அவர் அளித்த பேட்டி:

காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிட முடியாது என மத்திய அரசு கூறுவது தமிழகத்திற்கு செய்யும் துரோகம் மற்றும் உச்ச நீதிமன்ற அவமதிப்பு ஆகும்.

தில்லியில் நடைபெற்ற நீர் ஆதார கவுன்சில் கூட்டத்தில் தேசிய தண்ணீர் கொள்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள அனைத்து அம்சமும் உழவர்களுக்கு எதிரானது. இந்த கொள்கையை அமல்படுத்தினால் உழவுத் தொழில் அடியோடு அழிந்து போகும். இதை ரத்து செய்ய வேண்டும்.

திராவிடக் கட்சிகளின் துரோகத்தால் விவசாயிகளுக்கு இந்த ஆண்டு குறுவையில் ரூ. 2 ஆயிரம் கோடியும், சம்பாவில் ரூ. 5 ஆயிரம் கோடியும் ஆக மொத்தம் ரூ. 7 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் மேட்டூர் அணையில் 41 டிஎம்சி தண்ணீர் மட்டுமே இருந்தது. இன்னும் 10 டிஎம்சி தண்ணீரை பெற்றிருந்தால் குறுவைக்கு ஜூன் 12-ல் மேட்டூர் அணை திறக்கப்பட்டிருக்கும். அந்த நேரத்தில் கர்நாடக அணைகளில் 41 டிஎம்சி தண்ணீர் இருந்தது.

சட்டப்படியான தண்ணீரை நமக்கு அவர்கள் கொடுக்க மறுத்து, கோடை சாகுபடி செய்து கொண்டார்கள்.  ஆகஸ்ட் மாதம் கர்நாடக அணைகளில் நிறைய தண்ணீர் இருந்தது. தமிழ்நாடு அரசு அந்த நேரத்தில் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தால் சம்பா சாகுபடியை செய்திருக்கலாம்.

காலதாமதமாக செப்டம்பரில் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திற்கு சென்றதால் செப்டம்பர் 17-ல் மேட்டூர் அணை திறக்கப்பட்டு, அக்டோபர் மாதத்தில்தான் சம்பா சாகுபடி தொடங்கப்பட்டது. அதன்பின், தொடர்ந்து தமிழ்நாடு அரசு போதிய கவனம் செலுத்தாததால் தண்ணீர் பெற்றுத் தர முடியவில்லை.

உச்ச நீதிமன்றத்தை அணுகியதைத் தொடர்ந்து தமிழக முதல்வர் தில்லி சென்று பிரதமரை சந்தித்தும், தமிழக அரசியல் கட்சிகளை கலந்து பேசி தில்லிக்கு அழைத்துச் சென்றும் வாதாடி இருந்தால் சம்பா சாகுபடிக்கு தேவையான தண்ணீரை பெற்றிருக்கலாம்.  அவ்வாறு செய்யத் தவறியதால் டெல்டா மாவட்டத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

இதற்கு மத்திய அரசில் அங்கம் வகிக்கும் திமுகவும், அக்கறை எடுத்துக் கொள்ளாத அதிமுகவும் தான் காரணம்.

வரும் 2016ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் பாமக, திராவிட கட்சிகள் மற்றும் தேசிய கட்சிகளோடு கூட்டணி சேராமல் 3ஆவது அணி அமைக்கும். அவ்வாறு அமையும் 3ஆவது அணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் முதல் கையெழுத்து மதுவை ஒழிப்பதற்குத்தான் என்றார் ராமதாஸ்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

31.12.2012 A.M

## நெல்சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் இணை இயக்குநர் வேண்டுகோள்

ஸ்ரீவைகுண்டம்:ஆழ்வார்திருநகரி வட்டாரத்தில் பிசான நெல்சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வேளாண் இணை இயக்குநர் தூத்துக்குடி மற்றும் வேளாண் உதவி இயக்குநர் தென்திருப்பேரை ஆகியோர் சில அறிவிப்புகள் வெளியிட்டுள்ளனர்.

தற்போது ஆழ்வார்திருநகரி வட்டாரத்தில் பிசான நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.தற்போது உள்ள சூழ்நிலையில் பருவமழை அளவு குறைவினாலும், அணையின் நீர் மட்டம் குறைந்து வரும் சூழ்நிலையினாலும், நீர் நிலைகளில் பாசனத்திற்கு தேவையான நீர் இல்லாமலும் குறைவாகவும் உள்ளது. இவ்வாறு உள்ள சூழ்நிலையில் இருக்கும் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தினால் பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்கள் மற்றும் பயிர் சாகுபடி நாள் முழுவதும் பாசனம் செய்து பிசான நெல் பயிரை காப்பாற்ற முடியும். அதற்காக கீழ்கண்ட சில முக்கியமான சாகுபடி முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றிய விவசாயிகளும் மற்றும் வழக்கமான சாகுபடி முறையை பின்பற்றிய விவசாயிகளும், காய்ச்சலும் , பாய்ச்சலும் முறையை பயன்படுத்தி நீர் மறைய நீர் கட்டி பாசனம் செய்து வர வேண்டும். வயலில் 2.5 செ.மீ. உயரம் வரை நீர் கட்டி பின் காய்ந்த பிறகு பாசனம் செய்தாலே போதுமானது. இவ்வாறு செய்வதால் பயிரின் வாழ்நாள் முழுவதும் இருக்கும் பாசன நீரை கொண்டு பயிரை காப்பாற்ற முடியும். அளவுக்கு அதிகமான தலைசத்து உரங்களை நிலத்தில் இடுவதை தவிர்க்க வேண்டும். இது பயிரின் தழை வளர்ச்சியை அதிகப்படுத்துவதாநீர்தேவை அதிகரிக்க அதிக வாய்ப்புள்ளது. இலைவண்ண அட்டையை பயன்படுத்தி பயிரின் தேவையறிந்து மட்டுமே தழைச்சத்து உரங்களை இட வேண்டும். மேலும் பிசான நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைவரும் பயிர்காப்பீடு திட்டத்தில் இணைந்து தங்களது பயிரை காப்பீடு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் வறட்சியால் பாதிப்படைந்த பயிர்களுக்கு காப்பீட்டு இழப்பு தொகை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. இதற்கான காப்பீட்டு கட்டணத்தை வரும் 15.01.2013 க்குள் அருகிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் செலுத்த வேண்டும். மேலும் இதுபற்றிய விபரங்களுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள்

மற்றும் தென் திருப்பேரை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெற விவசாய பெருமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கால்நடைகளுக்கு சிகிச்சை முகாம் கிராமங்களில் நாளை நடத்த முடிவு

திண்டுக்கல் : அரசினால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள், பசுக்களுக்கான சிறப்பு சிகிச்சை முகாம் நாளை(டிச. 31) அனைத்து கிராமங்களிலும் நடத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் 12,000 ஏழை பெண்களுக்கு 12,000 பசுக்களும், ஒரு லட்சம் பயனாளிகளுக்கு மொத்தம் 4 லட்சம் ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் கடந்த ஆண்டு 150 பசுக்கள், 16080 ஆடுகளை பயனாளிகள் பெற்று பயனடைந்தனர். இந்த ஆண்டு இதுவரை 50 பசுக்கள், 17420 ஆடுகள் ஏழைகளுக்கு தரப்பட்டுள்ளது.

இவைகளுக்கான சிறப்பு இலவச முகாம் அனைத்து கிராமங்களிலும் நாளை முதல் நடைபெற உள்ளது.

விலையில்லாஆடுகள், பசுக்களை பெற்றவர்கள் தங்கள் கால்நடைகளை முகாமிற்கு அழைத்து சென்று பரிசோதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## வறட்சியை சமாளிக்க விவசாயிகளுக்கு யோசனை

குஜிலியம்பாறை : குஜிலியம்பாறை வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், நிலக்கடலை, கரும்பு ஆகியன போதுமான மழை இல்லாத காரணத்திலும், நீர் ஆதாரம் குறைந்து வருவதாலும் பயிர்கள் சற்று வாடும் நிலையில் உள்ளது.

இந்த சூழ்நிலையில், பயிர்களை பாதுகாக்க வேளாண்மை உதவி இயக்குநர் ரவிபாரதி யோசனை தெரிவித்துள்ளார்.பொட்டாசியம் குளோரைடு 2 சதவீத கரைசல் தெளிப்பதின் மூலம் பயிர்கள் இழைவழியாக நீர் ஆவியாதல் குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக மகசூல் தரக்கூடி பூ , பிஞ்சுகள் உதிராமல் பயன்தரக்கூடிய அளவில் மகசூல் கிடைக்கும்.பயிறு வகை பயிர்களான துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயிறு ஆகிவற்றில் பூக்கும் தருணம், 2 சதவீத டி.ஏ.பி., இழை வழி கரைசல் தெளிக்க சிபாரிசு செய்யப்படுகிறது. இதனால் ஏக்கருக்கு 100 கிலோ முதல் 150 கிலோ வரை கூடுதல் மகசூல் கிடைக்க செய்யும்.

மிக இக்கட்டடான சூழ்நிலையில், பாசன நீரை சிக்கனமாகவும் விரையமின்றியம் பயிர்களுக்கு கிடைத்திட ஏதுவாக தெளிப்பு நீர் கருவிகள்

மற்றும் மழை தூவுவான் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

மேலும் விபரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அனுகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராட்சை விவசாயிகள் கவலை மொச்சை விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர் : தேனி மாவட்டத்தில், அதிகளவு பனிப்பொழிவால், திராட்சையில் செவட்டை நோய் தாக்கி பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் திராட்சை விவசாயிகள் கவலையடைந்துள்ள நிலையில், இதுவே மொச்சை மகசூலை அதிகரித்துள்ளதால், மொச்சை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் கூடலூர், குள்ளப்பகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் திராட்சை விவசாயம் அதிகம் உள்ளது. கடந்த சில தினங்களாக, கடும் பனிப்பொழிவால், திராட்சையில் செவட்டை நோய் தாக்கியுள்ளது.பலன் தரும் நேரத்தில், பூக்கள் உதிர்ந்து வரத்து குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

செவட்டை நோயில் இருந்து, பயிர்களை காப்பாற்ற,தினசரி மூன்று முறை மருந்து தெளித்து வருகின்றனர். இதனால் திராட்சை விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

மகிழ்ச்சியில் மொச்சை விவசாயிகள்: பனிப்பொழிவால், மொச்சை பயிரில் பூக்கள் கூடுதலாக பூத்து,காய்ப்பு அதிகரித்துள்ளது. கூடலூரில் மொச்சை சீசன் துவங்கும் போது, வரத்து மிகக் குறைவாக இருந்தது.தற்போது வரத்து அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## விளை நிலங்களை சேதப்படுத்தும் பன்றிகள்

ஆண்டிபட்டி:கோயில்பட்டி ஊராட்சி, மாலப்பட்டியில் வளர்க்கப்படும் பன்றிகள் விளைநிலங்களில் புகுந்து சேதப்படுத்துவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

ஆண்டிபட்டி, கோயில்பட்டி ஊராட்சி முத்தனம்பட்டி அருகே உள்ள மாலப்பட்டியில் சிலர் பன்றி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சுடுகாடு அருகே தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே வரும் பாலத்தின் அடிப்பகுதியில் பன்றிகளை அடைத்து வைத்து, பகலில் சுற்றித்திரிய விடுகின்றனர்.

பன்றி வளர்க்கப்படும் இடத்தில் நிலவும் சுகாதாரக்கேடு இந்த பகுதியில் வசிப்போருக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. பகலில் சுற்றித்திரியும் பன்றிகள் பக்கத்தில் உள்ள விளைநிலங்களில் புகுந்து நாசம் செய்து விடுகின்றன. இப்பகுதியில் பன்றி வளர்ப்புக்கு தடை விதிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## நெற்குப்பையில் வளர்ச்சி பணிக்கு ரூ.1.12 கோடி

திருப்புத்தூர்:திருப்புத்தூர், நெற்குப்பை பேரூராட்சியில் ரூ. 1.12 கோடியில், ரோடு, ஊரணி மேம்பாட்டு பணிகள் செய்யப்பட உள்ளதென, தலைவர் சஞ்சீவி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது,

நபார்டு, ஊரணி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.47 லட்சத்தில், 2 வது வார்டு நல்லூரணியில் கரை தடுப்புச் சுவர் கட்டுதல், ரோடு மேம்பாடு

திட்டத்தின் கீழ் ரூ. 36

லட்சத்தில், 1வது வார்டு பொட்டவெளிக்கலம் தார்ச்சாலை புதுப்பித்தல், ரூ.29.4 லட்சத்தில்

10 வது வார்டு பூசணிக்களம் ரோடு மேம்படுத்துதல் பணிகள் நடத்தப்

படும். செயல் அலுவலர் ராதாகிருஷ்ணன் உடனிருந்தார்.

## மாவட்டங்களில் பரவலாக மழை

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம்,திருவள்ளூர் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக, ஸ்ரீபெரும்புதூரில், 7.66 செ.மீ., மழைப் பதிவாகிஉள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த இரு தினங்களாக மழைபெய்து

வருகிறது.

காஞ்சிபுரத்தில் 3.7 செ.மீ, உத்திரமேரூர், 1.3 செ.மீ., செங்கல்பட்டு, 4.6.செ.மீ., ஸ்ரீபெரும் புதூர், 7.66 செ.மீ., செங்கல்பட்டு, 4.6 செ.மீ., திருக்கழுக்குன்றம், 1.8 செ.மீ, மதுராந்தகம், 1.9 செ.மீ., தாம்பரம், 2.3 செ.மீ., ஆலந்தூர், 3.8 செ.மீ., கல்பாக்கம், 2.1 செ.மீ., கோளம்பாக்கம், 1.3 செ.மீ., மழைப் பதிவாகிஉள்ளது.

திருவள்ளூர்

கடந்த, 24 மணி நேரத்தில், மாவட்டத்தில் அதிகபட்சமாக சோழவரத்தில், 5.3 செ.மீட்டரும், குறைந்தபட்சமாக பொன்னேரியில், 1.0 செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்டு உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, இரு நாட்களாக மழை பெய்தது.

தாமரைப் பாக்கத்தில், 5.1 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. திருவள்ளூர்,

பூந்தமல்லி, செம்பரம்

பாக்கம், திருவாலங்காடு ஆகிய இடங்களில் தலா, 4.0 செ.மீ., மழை

பதிவானது.

## வீடூரில் விதை கிராமத் திட்ட பயிற்சி

விழுப்புரம்:வீடூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

மயிலம் வட்டார வேளாண்மை துறை சார்பில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம் வீடூரில் நடந்தது.

ஊராட்சி தலைவர் ரவி தலைமை தாங்கினார். கவுன்சிலர் கெங்காதுரை முன்னிலை வகித்தார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் பயிற்சி முகாமை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

மேலும் முன்னோடி விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் கோனோ வீடர்கள் (களை எடுக்கும் கருவிகள்) வழங்கப்பட்டது.

விதைச் சான்று உதவி இயக்குனர் வேலாயுதம் நெல், மணிலா, உளுந்து விதை உற்பத்திக்கான தொழில் நுட்ப பயிற்சி அளித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ஆறுமுகம், ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டங்கள், எண்ணெய்வித்து பெருக்கத் திட்டங்கள், எண்ணெய் பனை சாகுபடித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் குறித்து பேசினார்.அட்மா திட்டப் பணிகள் குறித்து மேலாளர் ஸ்டெல்லாமேரி விளக்கம் அளித்தார்.

இதில் வேளாண்மை அலுவலர் சரவணன், துணை வேளாண்மை அலுவலர் அபிமன்னன், உதவி வேளாண்மை அலு வலர்கள் சீத்தா, பூவிழி, மகாலட்சுமி, மங்கையற்கரசி, சுதா, ஸ்டாலின் கலந்து கொண்டனர்.

## சொரையப்பட்டு கிராமத்தில் தொழில்நுட்ப கருத்தரங்கம்

திருக்கோவிலூர்:முகையூர் ஒன்றியம் சொரையப்பட்டில் வேளாண் துறை சார்பில் நவீன தொழில்நுட்ப விவசாயம் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

முகையூர் ஒன்றியம் சொரையப்பட்டில் நவீன தொழில்நுட்பம் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

ஒன்றிய சேர்மன் துளசிராஜா தலைமை தாங்கினார். விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் விளக்கி பேசினார்.

உதவி வேளாண்மை அலுவலர் சிவனேசன், வெங்கடகிருஷ்ணன், சிவக்குமார், திருமலை, ஒன்றிய கவுன்சிலர் மரியபிரகாசம், ஊராட்சி தலைவர் விஸ்வநாதன் மற்றும் பலர் பேசினர்.

துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி, ஆத்மா திட்ட மேலாளர் செந்தில்குமார், உதவி விதை

அலுவலர் கிருஷ்ணன், செந்தில், ஆறுமுகம் கலந்து கொண்டனர்.

இதில் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த 200 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மரவள்ளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

சின்னசேலம் : மரவள்ளிக்கிழங்கு விலை உயர்ந்துள்ளதால் சின்னசேலம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சின்னசேலம் பகுதியில் விவசாயமே முக்கிய தொழிலாக உள்ளது. மணிலா, கரும்பு, நெல், மரவள்ளி மற்றும் தோட்டப்பயிர்கள் செய்யப்படுகிறது. பராமரிப்பு செலவு குறைவு மற்றும் அதிக அளவில் தண்ணீர் தேவையில்லை என்பதால் மரவள்ளி அதிகம் பயிரிடப்படுகிறது.கடந்த ஆண்டு கன மழை மற்றும் அதிக பரப்பளவில் மரவள்ளி பயிர்செய்யப்பட்டதால் விலை வீழ்ச்சியடைந்து, மூட்டை 200 ரூபாய் வரை மட்டுமே விற்றதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே மரவள்ளி விலை மூட்டை 500 ரூபாய்க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மின் வெட்டு, உரம் விலை உயர்வு, ஆள் பற்றாக்குறை மற்றும் பருவமழை பொய்த்தது போன்ற காரணங்களால் வேதனையில் இருந்த விவசாயிகளுக்கு மரவள்ளி அதிக விலை உயர்வு சின்னசேலம் பகுதி விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

**விதை உற்பத்திக்கான பயிற்சி முகாம்**

அவலூர்பேட்டை : சங்கிலிகுப்பத்தில் தரமான விதை உற்பத்தி குறித்து பயிற்சி முகாம் நடந்தது. மேல்மலையனூர் ஒன்றியம் சங்கிலிகுப்பம் கிராமத்தில் விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி செய்வது குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

ஊராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் அமுதா முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு தலைமை தாங்கினார். நீர் வளம், நில வளம் மற்றும் வேர்க்கடலை, நெல், உளுந்து சாகுபடியில் தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து அவர் விளக்கினார்.

முன்னாள் எம்.எல்.ஏ., தமிழ்மொழி ராஜதத்தன் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேட்டினை வழங்கினார். நாகார்சுனா கெமிக்கல் பெர்டிலைசர்ஸ் பகுதிமேலாளர் செந்தில் குமார், 100 சதவீதம் மானிய விலையில் தெளிப்பு நீர் தூவும் கருவி, மழைத்தூவும் கருவிகளின் பயன் குறித்து பேசினார்.

இதில் உதவி வேளாண் அலுவலர்கள் ரகுபதி, வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி,தமிழ்மணி,

இளவரசி,பராசக்தி, அட்மா திட்ட களப்பணியாளர்கள் ஸ்ரீதேவி, அருள்பாபு, மோகன்ராஜ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். கண்ணப்பன் நன்றி கூறினார்.

**டெல்டா பாசனத்தில் 38 கிராமங்கள் நீக்கம் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரதம்**

ஸ்ரீமுஷ்ணம் : ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் உள்ள 38 கிராமங்களை டெல்டா பாசன பகுதியில் சேர்க்க வலியுறுத்தி, டெல்டா உரிமை மீட்புக்குழுவினர் நேற்று இரவு முதல் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் குறுவட்டத்தைச் சேர்ந்த 38 கிராமங்கள் டெல்டா பாசனப் பகுதியில் இருந்து நீக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட 38 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஒன்றிணைந்து டெல்டா உரிமை மீட்புக்குழு அமைத்து, கடந்த 27ம் தேதி ஸ்ரீமுஷ்ணத்தில் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டம் நடத்தினர்.

இதில், தீர்வு ஏற்படாத நிலையில், மதியத்திற்கு மேல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். அன்று இரவு, சிதம்பரம் சப் கலெக்டர் சுப்ரமணியன், கோரிக்கைகளை நிறைவேற்ற ஒருநாள் அவகாசம் கேட்டதை ஏற்று போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

சப் கலெக்டர் கேட்ட அவகாசம் முடிந்தும் கோரிக்கையை நிறைவேற்றாததால், டெல்டா உரிமை மீட்புக் குழுவின் அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று ஸ்ரீமுஷ்ணத்தில் நடந்தது.

கூட்டமைப்புத் தலைவர் தங்க ஆனந்தன் தலைமை தாங்கினார். விவசாய சங்க பிரதிநிதிகள் ஆதிமூலம், காமராஜ், பட்டுச்சாமி, செல்வராஜ், பிரகாஷ், லட்சுமணன், சேகர், சிவசங்கரன், ராஜேந்திர குமார், செல்லப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், ஸ்ரீமுஷ்ணம் பகுதியை டெல்டா பாசன பகுதியில் சேர்க்க வலியுறுத்தி, காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் நடத்தவும், போராட்டத்தை வலுப்படுத்த குழு அமைத்து செயல்படுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, நேற்று இரவு 7 மணி முதல் ஸ்ரீமுஷ்ணம் கடைவீதியில், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் காமராஜ் தலைமையில் 10 பேர் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கினர்.

**யானைகள் ஊடுருவலை தடுக்க கோவைக்கு கூடுதல் நிதி :வேளாண் துறை அமைச்சர் வலியுறுத்தல்**

கோவை : ""யானைகள் ஊடுருவலை தடுக்க கோவைக்கு கூடுதல் நிதி ஒதுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது"என வேளாண்மை துறை அமைச்சர் தாமோதரன் கூறினார்.

தமிழ்நாடு வன அலுவலர்கள் சங்கத்தின் பொன்விழா ஆண்டு சிறப்பு மாநில மாநாடு, கோவையில் நேற்று நடந்தது.

இம்மாநாட்டில், தமிழக வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது:

வனம் நன்றாக இருந்தால் தான், போதிய மழை பெய்யும்; மழை பெய்தால் தான் விவசாயம் செழிக்கும்; வனத்தையும், வன உயிரினங்களையும், வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு, வனத்துறையினருக்கு உள்ளது.

புலிகள் அதிகமுள்ள மாநிலங்கள் பட்டியலில், தமிழகம் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. வனத்துறையினரின் அர்ப்பணிப்புள்ள பணியே இதற்குக் காரணம். இங்குள்ள 3 புலிகள் காப்பகங்கள், 4 தேசிய பூங்காக்கள், 14 வன உயிரினச் சரணாலயங்கள், கூடுதல் பாதுகாப்புடன் இருப்பதால் தான், வன உயிரினங்கள் அதிகம் வசிக்கின்றன.

இன்னும் சிறப்பாக பாதுகாத்து, தமிழகத்துக்கு நல்ல பெயரை, வனத்துறையினர் எடுத்து தர வேண்டும். கோவை மாவட்டத்தில் பல இடங்களில் காட்டு யானைகள் பிரச்னை அதிகமாகவுள்ளது.

பிரச்னைக்கு தீர்வு காண, கடந்தாண்டில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. வரும் நிதியாண்டிலும் இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கி, காட்டு யானை ஊடுருவல் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு, அமைச்சர் தாமோதரன் பேசினார்.

தொண்டாமுத்தூர் எம்.எல்.ஏ., வேலுமணி பேசுகையில், ""யானைகள் பிரச்னை அதிகமாகவுள்ள எனது தொகுதியில், அகழி வெட்டுவது, யானைகளைத் துரத்துவது போன்ற பணிகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்கி, பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டும்," என்றார்.

கோவை மாநகராட்சி மேயர் வேலுச்சாமி பேசுகையில்,

""மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள கோவை மாவட்டத்தில், காட்டு யானைகளின் ஊடுருவல் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது.

தமிழக அரசு இதற்கு நிதி ஒதுக்கி வருகிறது; ஆனால், வனத்தையும், வன உயிரினங்களையும் பாதுகாக்கும் பொறுப்பு, மத்திய அரசுக்கும் இருப்பதால், மனித-வன உயிரின மோதலைத் தடுக்கும் பணிக்கு, மத்திய அரசும் சிறப்பு நிதி ஒதுக்க வேண்டும்," என்றார்.

தமிழ்நாடு வன அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் நசீர், 25 கோரிக்கைகளை முன்வைத்தார்.

அவற்றை, முதல்வரின் கவனத்துக்கு எடுத்து சென்று நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக, அமைச்சர் பச்சை மால், வனத்துறை தலைவர் கவுதம்டே உறுதியளித்தனர்.
எம்.எல்.ஏ.,க்கள் மலரவன், சேலஞ்சர் துரை, சின்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
சங்கத்தின் மாநில அமைப்புச் செயலாளர் சிவப்பிரகாசம் வரவேற்றார்; மாநில பொருளாளர் சக்திவேல் நன்றி கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 8 நாளில் அரை அடி உயர்வு

மேட்டூர்: டெல்டா பாசன நீர் நிறுத்தப்பட்டதால், மேட்டூர் அணை நீர்மட்டம், எட்டு நாட்களுக்கு பின், அரை அடி உயர்ந்துள்ளது.
மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு, செப்டம்பர், 17ல் நீர்திறக்கப்பட்டது.
அணையின் நீர்மட்டம், 32 அடியாகவும், நீர் இருப்பு, 8.5 டி.எம்.சி.,யாகவும் குறைந்ததால், கடந்த, 21ம் தேதி காலை பாசன நீர் நிறுத்தப்பட்டது.
பாசனத்துக்கு ஜனவரி, 28 வரை நீர்திறக்க வேண்டிய நிலையில், 37 நாட்களுக்கு முன்பாகவே பாசன நீரை நிறுத்தியதால், டெல்டா சம்பா சாகுபடி பாதித்தது. பாசன நீர் நிறுத்தப்பட்டதால் மேட்டூர் அணைக்கு வந்த நீர் அப்படியே இருப்பு வைக்கப்பட்டது.
இதனால், கடந்த, 21ம் தேதி, 32.480 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 33.090 அடியாகவும், எட்டு நாளில் அணை நீர்மட்டம், அரை அடி உயர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## விலையில்லா கறவை மாடுகள் , ஆடுகளுக்கு மாவட்டத்தில் நாளை "ஸ்பெஷல் ' முகாம்

திருநெல்வேலி:விலையில்லா கறவை மாடுகள், ஆடுகளுக்கு நெல்லை மாவட்டத்தில் நாளை (31ம் தேதி) "ஸ்பெஷல்' முகாம் நடக்கிறது.
தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் 2011-12ம் ஆண்டிற்கு தமிழ்நாடு முழுவதும் 12 ஆயிரம் ஏழை பெண் பயனாளிகளுக்கு 12 ஆயிரம் கறவை பசுக்களும், ஒரு லட்சம் பயனாளிகளுக்கு ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வீதம் மொத்தம் 4 லட்சம் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.
நெல்லை மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டிற்கு நெல்லை மாவட்டத்தில் 550 கறவை பசுக்களும், 16 ஆயிரத்து 336 வெள்ளாடுகளும், 2012-13ம் ஆண்டிற்கு 450 கறவை பசுக்களும், 19 ஆயிரத்து 796 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.
கால்நடை பராமரிப்பு துறை கால்நடை உதவி மருத்துவர்கள், அலுவலர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள திட்ட கிராமங்களில் மாதம் தோறும் சிறப்பு முகாம் மேற்கொள்கின்றனர்.

நெல்லை மாவட்டத்தில் விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கிய கிராமங்களில் நாளை (31ம் தேதி) சிறப்பு முகாம் நடக்கிறது.
எனவே, இத்திட்டங்களின் மூலம் பயனடைந்த பயனாளிகள், தங்கள் கால்நடைகளை தவறாது கொண்டு வந்து கால்நடை மருத்துவர்களிடம் காண்பித்து கால்நடைகளின் நலன் காக்க தக்க அறிவுரை பெற வேண்டும் என்று கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்தார்.

**திருந்திய நெல் சாகுபடி : விவசாயிக்கு ரூ. 3 ஆயிரம்**

கம்பம் : திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யும் விவசாயிகளுக்கு, தலா மூவாயிரம் ரூபாய் மானியமாக அரசு வழங்கினாலும்,பெரும்பாலான விவசாயிகள் இம்முறையில் சாகுபடி செய்யவில்லை.
திருந்திய நெல் சாகுபடி முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த முறையில் நடவு செய்தால், கூடுதல் மகசூல் கிடைக்கும். இடுபொருட்கள் பயன்பாடு குறைவு, தண்ணீர் சிக்கனம் இந்த முறையில் பிளஸ் பாய்ன்ட்.இதற்காக விவசாயிகளை அதிகாரிகள் ஊக்கப்படுத்தி வருகின்றனர். இருந்த போதும் பெரும்பாலான விவசாயிகள் இந்த முறையை பின்பற்ற ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.
திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றும் விவசாயிளுக்கு தலா ரூ. 2 ஆயிரம் ரொக்கமும், ஆயிரம் ரூபாய்க்கு இடுபொருட்களும் இலவசமாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.
ஒவ்வொரு உதவி விவசாய அலுவலரும், 35 விவசாயிகளுக்கு இந்த மானியம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
பெரும்பாலான விவசாயிகள் இந்த முறையை பின்பற்றவில்லை. மானியம் என்ன ஆனது என்பதும் தெரியவில்லை. கம்பம் விவசாயத்துறை உதவி இய க்குநர் அசோகனிடம் கேட்டபோது, " கம்பம் வட்டாரத்தில் 140 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் நடக்க வாய்ப்பில்லை.
திருந்தி நெல் சாகுபடி செய்ததற்கான போட்டோ மற்றும் ஆதாரங்கள் தந்தால் மட்டுமே 2 ஆயிரம் ரூபாய் விவசாயி வங்கி கணக்கில் போடப்படும். மேலும் ஆயிரத்திற்கான இடுபொருள்களை நாங்களே வாங்கி தருகிறோம். எனவே தவறுகள் நடக்க வாய்ப்பில்லை' என்றார்.
யாராவது திருந்திய சாகுபடி முறையில் சாகுபடி செய்து, மானியம் கிடைக்கவில்லை என்றால், கம்பம் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும், கேட்டுக் கொண்டார்.

**இந்தியாவின் கச்சா பாமாயில் இறக்குமதி உயரும் :இந்தோனேஷியாவின் வரி குறைப்பால் ...**

ஜகார்த்தா:இந்தோனேஷிய அரசு, கச்சா பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை, 9 சதவீதத்தில் இருந்து, 7.5 சதவீதமாக குறைத்துள்ளது. இதனால், இதன் விலை கிலோவிற்கு, 2 ரூபாய் வரை

குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரி குறைப்பு, வரும் 2013ம் ஆண்டு ஜனவரி முதல் அமலுக்கு வருகிறது.
முதல் இடம்:உலகில், பாமாயில் உற்பத்தியில் இந்தோனேஷியா முதல்இடத்தில் உள்ளது. எனினும், இந்நாடு, கச்சா பாமாயில் ஏற்றுமதியை கட்டுப்படுத்தி, உள்நாட்டில், பாமாயில் சுத்திகரிப்பு துறை வளர்ச்சி காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.
இதையடுத்து, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, கச்சா பாமாயில் ஏற்றுமதி மீதான வரியை, 19 சதவீதமாக உயர்த்தியது.அதே சமயம், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை, 9 சதவீதமாக குறைத்தது. இதனால், உள்நாட்டில் பாமாயில் சுத்திகரிப்பு துறை எழுச்சி கண்டது.
**ஏற்றுமதி வரி**:இந்நிலையில், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் உற்பத்தி பெருகியதாலும், சர்வதேச போட்டியை சமாளிக்கும் நோக்கிலும் இந்தோனேஷிய அரசு, கச்சா பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை படிப்படியாக குறைக்கத் துவங்கியது.கடந்த செப்டம்பர் மாதம், கச்சா பாமாயில் ஏற்றுமதி வரி, 13.5 சதவீதத்தில் இருந்து, 9 சதவீதமாக குறைக்கப்பட்டது.
இந்நிலையில், தற்போது, மீண்டும் வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது.கச்சா பாமாயிலை தொடர்ந்து, சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரியும், மூன்று சதவீதத்தில் இருந்து, இரண்டு சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.
இந்தோனேஷியா, ஒவ்வொரு மாதமும், சர்வதேச நிலவரத்திற்கேற்ப பாமாயில் ஏற்றுமதி விலையை மாற்றி அமைத்து வருகிறது. கடந்த எண்ணெய் பருவத்தில் (அக்.,-செப்.,), இந்தோனேஷியாவின் கச்சா பாமாயில் உற்பத்தி, 6-10 சதவீதம் அதிகரித்து, 2.50 - 2.60 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.
**மலேஷியா:**பாமாயிலை பொறுத்தவரை, இந்தோனேஷியாவிற்கு கடும் போட்டியாக மலேஷியா உள்ளது. மலேசியாவில், கச்சா பாமாயில் உற்பத்தியும், கையிருப்பும் அதிகரித்துள்ளது.இதனால், இந்நாடு, வரும் ஜனவரியில் கச்சா பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை அடியோடு நீக்க முடிவு செய்துள்ளது.இதன் காரணமாகவே, இந்தோனேஷிய அரசும், பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை வெகுவாக குறைத்துள்ளது.
இந்தோனேஷியாவின் கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டிருப்பது, இந்திய இறக்குமதியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் மிகவும் பயன் அளிப்பதாக இருக்கும் என, இந்திய எண்ணெய் வர்த்தகர்கள்
தெரிவித்தனர்.உற்பத்தி:உள்நாட்டில், தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, சமையல் எண்ணெய் உற்பத்தி இல்லாததால், நம் நாடு மிக அதிக அளவில், கச்சா பாமாயிலை இறக்குமதி செய்து வருகிறது.
தற்போது, உள்நாட்டில், தாவர எண்ணெய்க்கான தேவை, 1.55 கோடி டன்னாக உள்ளது.இந்தியா, 90 லட்சம் டன்னுக்கும் அதிகமாக, தாவர எண்ணெய் வகைகளை இறக்குமதி

செய்து வருகிறது. குறிப்பாக, இந்தோனேஷியாவிலிருந்து, மிக அதிக அளவில் தாவர எண்ணெய் வகைகள், இறக்குமதியாகின்றன.

## நாட்டின் நெல் கொள்முதல் 5 சதவீதம் அதிகரிப்பு

புதுடில்லி:நடப்பு 2012-13ம் சந்தை பருவத்தில் (அக்.,-செப்.,), இதுவரையிலுமாக, நாட்டின் நெல் கொள்முதல், 1.60 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற 2011-12ம் பருவத்தின், இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட கொள்முதலை (1.53 கோடி டன்) விட, 5 சதவீதம் அதிகம் என, இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது. மதிப்பீட்டு காலத்தில், பஞ்சாப் மாநிலத்தின் நெல் கொள்முதல், 76.60 லட்சம் டன்னிலிருந்து, 85.44 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. அரியானா மாநிலத்தின் நெல் கொள்முதல், 25.74 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. சத்தீஸ்கர் மற்றும் ஆந்திர மாநிலங்களின் நெல் கொள்முதல் முறையே, 17.41 லட்சம் டன் மற்றும் 13.90 லட்சம் டன்னாக உள்ளன.

இன்றைய வேளாண் செய்திகள்

31.12.2012 A.M

## விவசாயிகள் கவலை டெல்டாவில் மழை ஓய்ந்தது



தஞ்சை : டெல்டா மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக மிதமாக பொழிந்த மழை நேற்று ஓய்ந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர். பருவ மழை பொய்த்தது, தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர்கள் கருக தொடங்கியது. இந்நிலையில் வங்க கடலில் உருவான புயல் சின்னம் காரணமாக கடந்த 2 நாட்களாக டெல்டா மாவட்டங்களில் மிதமான சாரல் மழை விட்டு விட்டு பெய்தது. நேற்று 3வது நாளாக தஞ்சை மாவட்டத்தில் மட்டும் பரவலாக லேசான மழை பெய்தது.

நாகை, திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் இருந் தது. அவ்வப்போது வெயில் அடித்தது. கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் மழை இல்லை. தீடீரென மழை பெய்ததால், அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த மற்றும் 60 நாள் சம்பா பயிர்களை காப்பாற்றி விடலாம் என்று விவசாயிகள் நம்பி இருந்தனர். தற்போது மழை நின்று விட்டதால் அவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## கூட்டுறவு வங்கி , சங்கங்களுக்கு அரசு மானியம் ரூ.72 கோடி



சென்னை : மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் நிதி நிலைமையை சீராக்கும் வகையில் ரூ.72 கோடியே 8 லட்சத்தை அரசு மானியமாக ஒதுக்கீடு செய்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தின் கிராம பொருளாதார வளர்ச்சியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் பெறப்படும் மறு நிதி ஆகியவற்றின் மூலம் பெறும் நிதி ஆதாரங்களை கொண்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் போன்ற பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதி உதவி அளித்து வருகின்றன. கிராமப் புறங்களில் வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா கடன்கள் வழங்குவதே இச்சங்கங்களின் நோக்கமாகும்.

வேளாண் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் நிதிநிலைமையை சீராக்க, சென்ற ஆண்டு மானியமாக ரூ.82 கோடியே 54 லட்சத்து 57 ஆயிரத்து 662 விடுவிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

தற்போது, மாநில அரசின் பங்காக 23 தகுதியுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு மானியமாக ரூ.1 கோடியே 87 லட்சத்து 82 ஆயிரத்து 119, ராமநாதபுரம்,

திருநெல்வேலி, புதுக்கோட்டை மற்றும் மதுரை ஆகிய 4 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு மானியமாக ரூ.70 கோடியே 20 லட்சத்து 70 ஆயிரத்து 191 ஆக மொத்தம் அரசு மானியமாக ரூ.72 கோடியே 8 லட்சத்து 52 ஆயிரத்து 310 விடுவிக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## நடப்பாண்டில் நெல் கொள்முதல் 5% அதிகரிப்பு



புதுடெல்லி : நடப்பு சந்தை ஆண்டில் நெல் கொள்முதல் 5 சதவீதம் உயர்ந்து, 1.6 கோடி டன்னாக உள்ளது. இதுகுறித்து இந்திய உணவுக் கழகத்தின் உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: நடப்பு சந்தை ஆண்டில் (அக்டோபர் , செப்டம்பர்) நெல் கொள்முதல் உயர்ந்துள்ளது. கடந்த 2011,12ம் ஆண்டில் இதே காலத்தில் 1.53 கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், தற்போது அது 5 சதவீதம் உயர்ந்து 1.6 கோடி டன்னாக உள்ளது.

ஜூலை முதல் ஜூன் மாதம் வரையிலான காரிப் பருவத்தில், கடந்த ஆண்டில் 9.15 கோடி டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், 2012,13ல் இது 8.55 கோடி டன்னாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டதில் பஞ்சாப் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அங்கு அரசு அமைப்புகள் மூலம் 85 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் 76 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

## வத்தல் விலை குவிண்டாலுக்கு ரூ.200 உயர்வு



விருதுநகர்: விருதுநகர் சந்தையில் கடலை வரத்து குறைந்துள்ளதால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த வாரம் 80 கிலோ மணிலா மூட்டை ரூ.5,400லிருந்து ரூ.5,600 ஆக உயர்ந்துள் ளது. இதனால் கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ரூ.1,880 லிருந்து ரூ.1,920 ஆக உயர்ந்துள்ளது. எள் தட்டுப் பாடு காரணமாக நல்லெண்ணெய் டின் ரூ.3,220 லிருந்து ரூ.3,420 ஆக உயர்ந்துள்ளது.மிளகாய் வத்தல் வரத்து இல்லாததால் ஏ.சி. வத்தல் குவிண்டால் ரூ.7,000 லிருந்து ரூ.7,200 ஆக உயர்ந்துள்ளது. பழைய முண்டு வத்தல் குவிண்டால் ரூ.4,800லிருந்து ரூ.5,300 ஆக உயர்ந்துள்ளது.

## உற்பத்தியில் இந்தியா முதலிடம் ரூ.1250 கோடிக்கு இஞ்சி ஏற்று மதி



சென்னை: உலக அளவில் இஞ்சி உற்பத்தியில் இந்தியா முதலிடத்தை பெற்றுள்ளது. இங்கிருந்து பல்வேறு வெளிநாடுகளுக்கு நடப்பாண்டில் ரூ.1250 கோடி மதிப்பிலான இஞ்சி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.இந்தியா, சீனா, ஜப்பான், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நைஜீரியா, மேற்கு இந்திய தீவுகள் ஆகிய நாடுகளில் இஞ்சி அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. இந்தியாவில் ஒடிஷா, கேரளா, கர்நாடகா, அருணாசலபிரதே சம், மேற்கு வங்கம், சிக்கிம், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இது விளைகிறது. கேரளாவில்தான் அதிகளவில் இஞ்சி உற்பத்தி செய்யப்படுகிறது. வயிற்றுக்கோளாறுகள், ஜீரணப்பிரச்னைகளுக்கு சிறந்த நிவாரணியாக இஞ்சி விளங்குவதால் மருத்துவ பயன்பாட்டுக்காக பல்வேறு நாடுகளில் இஞ்சியின் தேவை அதிகரித்துள்ளது. இதையடுத்து இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு இஞ்சி ஏற்றுமதி செய்வது அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் ரூ.1250 கோடிக்கும் மேலாக இஞ்சி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது சாதனையாக குறிப்பிடப்படுகிறது. இந்திய இஞ்சியானது சர்வதேச சந்தையில் கொச்சி இஞ்சி, கல்கத்தா இஞ்சி என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்
31.12.2012 A.M

## விவசாயிகளின் முன்னேற்றத்தில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது : தமிழக அரசு செயலாளர்

கோவை

இந்தியாவில் விவசாயிகளின் முன்னேற்றத்தில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என்று தமிழக அரசு செயலாளர் ககன்தீப் சிங் பேடி கூறினார்.

### கண்காட்சி நிறைவு விழா

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், மண்டல அளவிலான கால்நடை, மீன் வளம் மற்றும் செல்ல பிராணிகள் கண்காட்சி கோவை, சாய்பாபாகாலனியில் உள்ள ராமலிங்கம் செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் கடந்த 3 நாட்கள் நடைபெற்றது.

இதன் நிறைவு விழா நேற்று மாலை நடைபெற்றது. விழாவிற்கு கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் தலைமை தாங்கினார். கால்நடை பல்கலைக்கழக துணைவேந்தர் வரவேற்று பேசினார். கால்நடை துறை இயக்குனர் பாபு, வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

### ஆரம்பநிலை திட்டங்கள்

தமிழக கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ‘பண்ணையாளர்களுக்கான கால்நடை வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு கையேடு’ வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:–

நாட்டின் வளர்ச்சிக்கு ஆரம்ப நிலை திட்டங்களை மேம்படுத்துவது அவசியம். அதன்படி நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும் வேளாண்மை, கால்நடை, மீன்வளம் மற்றும் பால்வள துறைகளை மேம்படுத்த வேண்டும். இதற்காக அரசு வகுக்கும் திட்டங்கள் மக்களுக்கு முழுமையாக

போய் சேர வேண்டும். இந்த துறைகளை ஊக்குவித்தால் தான் விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும்.

ரூ.814 கோடி ஒதுக்கீடு

விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை வகுப்பதில் இந்தியாவில் தமிழகம் தான் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. கால்நடை பராமரிப்பு துறைக்காக கடந்த 2009–2010–ம் ஆண்டு ரூ.281 கோடியும், 2010–2011–ம் ஆண்டில் ரூ.305 கோடியும், 2011–2012–ம் ஆண்டில் ரூ.677 கோடியும் ஒதுக்கப்பட்டது. ஆனால் 2012–2013–ம் ஆண்டில் ரூ.814 கோடி தமிழக அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது.

இதேபோல் மீன்வளம் மற்றும் பால்வளத்துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இது நாட்டிற்கே பாடம் சொல்லும் விதமாக தமிழக திட்டங்கள் அமைந்துள்ளது. இதன்மூலம் விவசாயிகளின் பொருளாதாரம் உயர்ந்து வருகிறது. கிராமப்புறங்களை வளர்ச்சி அடைய செய்வது அரசின் நோக்கமாக உள்ளது.

இலவச ஆடுகள் திட்டம்

விவசாயிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் இந்தியாவில் தமிழகத்தில் தான் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்திற்கான பயனாளிகளை அரசு அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ செய்யாமல், கிராமசபை கூட்டங்கள் மூலம் பொதுமக்களே பயனாளிகளை தேர்வு செய்யும் முறை நடைமுறையில் உள்ளது.

விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாக அரசு திட்டங்கள் அறிவிக்கும்போது, அதை பயன்படுத்தி தங்களாகவே முன்னேற்றி கொள்ள வேண்டும். அரசின் திட்டங்களை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு செயலாளர் ககன்தீப் சிங் பேடி கூறினார்.

**வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் பெயிண்டி ங் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் அடை வடிவமைப்பு மற்றும் தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. கைவினை பொருட்கள், எம்பிராய்டரி, அடிப்படை தையல், ஆடைகளில் ஜர்தோசி, சம்கி மற்றும் பெயிண்டிங் வேலைப்பாடுகள் குறித்து தனித்தனியாக பயிற்சி அளிக்கப்படுகிறது. பள்ளி மாணவர்கள், பெண்கள், சுயதொழில் செய்ய விரும்புவோர் உள்பட அனைத்து தரப்பினரும் இந்த பயிற்சியை

பெறலாம். பேப்ரிக் பெயிண்டிங் பயிற்சி அடுத்த மாதம் (ஜனவரி) 23 மற்றும் 24–ந் தேதிகளிலும், மெஷின் எம்பிராய்டரிங் பயிற்சி அடுத்த மாதம் 29 மற்றும் 30 தேதிகளிலும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மனையியல் கல்லூரியில் உள்ள ஆடை வடிவமைப்பு மற்றும் அலங்கார தொழில்நுட்பத்துறை சார்பில் நடத்தப்படும்.

## அவினாசியில் பருத்தி வரத்து அதிகரிப்பு

அவினாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 4500 மூடை பருத்தி வந்திருந்தது. இது கடந்த வாரத்தை விட 1000 மூடைகள் அதிகம். ஏலத்தில் ஆர்.சி. எச். ரகம் குவிண்டால் ஒன்று ரூ.3400 முதல் ரூ. 3800 வரையிலும், டி.சி.எச்.ரகம் ரூ.4800 முதல் ரூ. 5000 வரை யிலும், எல்.ஆர்.ஏ. ரகம் ரூ.3400 முதல் ரூ.3900 வரை யிலும் ஏலம் போனது. ஏலத் தின் மொத்த மதிப்பு ரூ.60 லட் சமாகும். இந்த தகவலை சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## பனிக்காலத்தில் மல்பெரி செடியை தாக்கும் இலைச்சுருட்டுப் புழு கட்டுப்படுத்தும் முறை குறித்து விஞ் ஞானி விளக்கம்

உடுமலை,

பனிக்காலத்தில் மல் பெரியை தாக்கும் இலைச்சுருட்டுப்புழுவை கட்டுப்படுத்தும் முறை குறித்து மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி விளக் கம் அளித்து உள்ளார்.

இது குறித்து உடுமலை மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி செல்வராஜு ஒரு அறிக்கை வெளியிட்டு உள் ளார். அதில் அவர் கூறியிருப் பதாவது:

### இலை சுருட்டுப் புழு

மல்பெரி செடியின் விரிவ டையாத இளம் தளிர்களின் விளிம்புகளை இலைசுருட்டு புழுவின் இளம்புழுக்கள் தன் வாயில் இருந்து சுரக்கும் ஒரு வித மெல்லிய வெண்மையான பட்டு இழையை கொண்டு பிணைத்து அதனுள் இருந்து கொண்டு தளிரின் மென்மை யான சதைப் பகுதியை தின்று விடுகிறது. வளர்ச்சி அடைந்த புழுக்கள் இளம் தளிர்களை பெருமளவில் வேகமாக தின்று தீர்த்து விடுகின்றன.

அதன் புழுக்கைகள் பாதிக் கப்பட்ட பகுதிக்கு அடிப்பாகத் தில் உள்ள இலைகளின் மேல் காணப் படும். இலை சுருட்டுப் புழுக்கள் மல்பெரி செடியின் நுனி இலைகளை உண்பதோடு

மட்டுமல்லாமல், இளம் தண்டு களையும் சேதப்படுத்து கின் றன. இதனால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

**இளந்தழைகள் பற்றாக்குறை**

அதோடு பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவைப்படும் இளந்தழைகளுக்கு பற்றாக் குறையும் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட மல்பெரி செடியின் நுனிப் பகுதியை புழுக்களுடன் கிள்ளி எடுத்து அழிக்க வேண்டும். மேலும் தோட்டத்தில் உள்ள காய்ந்த இலைகள், களைகளை சேகரித்து எரிப்பதன் மூலம் கூட்டுப் புழுக்களை அழிக்க லாம். இரவு நேரங்களில் விளக்குப்பொறி அமைத்து தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

தோட்டத்தின் சுற்றுப் புறத்தில் சிறு மண் பானை களில் நீர் நிரப்பி வைத்து புழு உண்ணும் பறவைக ளை கவர செய்து புழுக்களை அழிக்க லாம். பாதிப்பு அதிகமாக இருந்தால் நுவான் பூச்சிக் கொல்லி ஒரு மில்லி மருந்தை, 1 லிட்டர் நீரில் கலந்து நன்றாக செடி நனையும்படி தெளிக்க வேண்டும்.

**அதிக மகசூல்**

புழுக்களின் தாக்குதல் 20 சத வீதத்துக்கு அதிகமாக இருந்தால் 10 நாட்கள் இடை வெளியில் 2வது மருந்தடிப்பு செய்ய வேண்டும். மருந்தடிப்பு செய்த 10 நாட்கள் கழித்தபின் இலைகளை புழுக்களுக்கு உணவாக அளிக்கலாம். முட்டை ஒட்டுண்ணி, டிரை கோ கிராம்மா கைலோனிஸ் 3சிசி (1 ஏக்கர்) கவாத்து செய்த 10வது நாள் விட வேண்டும்.

புழு ஒட்டுண்ணி, பிரகான் பிரேவிகார்னிஸ் 200 எண் ணிக்கை, (1 ஏக்கர்) கவாத்து செய்த 15வது நாள் விட வேண்டும். கூட்டுப்புழு ஒட் டுண்ணி, டெட்ராஸ்டைகஸ் ஹொவார்டி ஒரு லட்சம் (1 ஏக்கர்) கவாத்து செய்த 20வது நாள் விட வேண்டும். இந்த பரிந்துரைகளை பயன் படுத்துவதன் மூலம் பனி காலங்களில் மல்பெரி செடியை தாக்கும் இலைச் சுருட்டுப்புழுக்களை கட்டுப் படுத்தலாம். அதோடு அதிக மகசூல் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

உடுமலை,

பனிக்காலத்தில் மல் பெரியை தாக்கும் இலைச்சுருட்டுப்புழுவை கட்டுப்படுத்தும் முறை குறித்து மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி விளக் கம் அளித்து உள்ளார்.

இது குறித்து உடுமலை மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி செல்வராஜூ ஒரு அறிக்கை வெளியிட்டு உள் ளார். அதில் அவர் கூறியிருப் பதாவது:

**இலை சுருட்டுப் புழு**

மல்பெரி செடியின் விரிவ டையாத இளம் தளிர்களின் விளிம்புகளை இலைசுருட்டு புழுவின் இளம்புழுக்கள் தன் வாயில் இருந்து சுரக்கும் ஒரு வித மெல்லிய வெண்மையான பட்டு இழையை கொண்டு பிணைத்து அதனுள் இருந்து கொண்டு தளிரின் மென்மை யான சதைப் பகுதியை தின்று விடுகிறது. வளர்ச்சி அடைந்த புழுக்கள் இளம் தளிர்களை பெருமளவில் வேகமாக தின்று தீர்த்து விடுகின்றன.

அதன் புழுக்கைகள் பாதிக் கப்பட்ட பகுதிக்கு அடிப்பாகத் தில் உள்ள இலைகளின் மேல் காணப் படும். இலை சுருட்டுப் புழுக்கள் மல்பெரி செடியின் நுனி இலைகளை உண்பதோடு மட்டுமல்லாமல், இளம் தண்டு களையும் சேதப்படுத்து கின் றன. இதனால் செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

**இளந்தழைகள் பற்றாக்குறை**

அதோடு பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவைப்படும் இளந்தழைகளுக்கு பற்றாக் குறையும் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட மல்பெரி செடியின் நுனிப் பகுதியை புழுக்களுடன் கிள்ளி எடுத்து அழிக்க வேண்டும். மேலும் தோட்டத்தில் உள்ள காய்ந்த இலைகள், களைகளை சேகரித்து எரிப்பதன் மூலம் கூட்டுப் புழுக்களை அழிக்க லாம். இரவு நேரங்களில் விளக்குப்பொறி அமைத்து தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

தோட்டத்தின் சுற்றுப் புறத்தில் சிறு மண் பானை களில் நீர் நிரப்பி வைத்து புழு உண்ணும் பறவைக ளை கவர செய்து புழுக்களை அழிக்க லாம். பாதிப்பு அதிகமாக இருந்தால் நுவான் பூச்சிக் கொல்லி ஒரு மில்லி மருந்தை, 1 லிட்டர் நீரில் கலந்து நன்றாக செடி நனையும்படி தெளிக்க வேண்டும்.

**அதிக மகசூல்**

புழுக்களின் தாக்குதல் 20 சத வீதத்துக்கு அதிகமாக இருந்தால் 10 நாட்கள் இடை வெளியில் 2வது மருந்தடிப்பு செய்ய வேண்டும். மருந்தடிப்பு செய்த 10 நாட்கள் கழித்தபின் இலைகளை புழுக்களுக்கு உணவாக அளிக்கலாம். முட்டை ஒட்டுண்ணி, டிரை கோ கிராம்மா கைலோனிஸ் 3சிசி (1 ஏக்கர்) கவாத்து செய்த 10வது நாள் விட வேண்டும்.

புழு ஒட்டுண்ணி, பிரகான் பிரேவிகார்னிஸ் 200 எண் ணிக்கை, (1 ஏக்கர்) கவாத்து செய்த 15வது நாள் விட வேண்டும். கூட்டுப்புழு ஒட் டுண்ணி, டெட்ராஸ்டைகஸ் ஹொவார்டி ஒரு லட்சம் (1 ஏக்கர்) கவாத்து செய்த 20வது நாள் விட வேண்டும். இந்த பரிந்துரைகளை பயன் படுத்துவதன் மூலம் பனி காலங்களில் மல்பெரி செடியை தாக்கும் இலைச் சுருட்டுப்புழுக்களை கட்டுப் படுத்தலாம். அதோடு அதிக மகசூல் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**தேவைப்பாடு குறைந்ததால் காபி ஏற்றுமதி 9.15 சதவீதம் சரிவு**

சர்வதேச சந்தையில் தேவைப்பாடு குறைந்ததாலும், விலை சரிவடைந்ததாலும் 2012–ஆம் ஆண்டில் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 9.15 சதவீதம் குறைந்து 3.10 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது என இந்திய காபி வாரியம் தெரிவித்துள்ளது. இது, 2011–ஆம் ஆண்டில் 3.41 லட்சம் டன்னாக இருந்தது.

மதிப்பின் அடிப்படையிலும் சென்ற ஆண்டை விட காபி ஏற்றுமதி சற்றே குறைந்துள்ளது. சென்ற ஆண்டில் காபி ஏற்றுமதி வாயிலாக ரூ.4,788 கோடி கிடைத்தது இது, நடப்பு ஆண்டில் ரூ.4,707 கோடி என்ற அளவில் உள்ளது. எனினும் ரோபஸ்டா ரக காபியை பொறுத்தவரை கடந்த ஆண்டை காட்டிலும் ஓரளவு நல்ல விலை கிடைத்துள்ளது என காபி வாரியம் தெரிவித்துள்ளது.இவ்வாண்டில் 1.57 லட்சம் டன் ரோபஸ்டா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் 18 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. அராபிகா ஏற்றுமதி 57,834 டன்னாக உள்ளது. உலக சந்தையில் அராபிகா விலை வீழ்ச்சியடைந்ததால் காபி ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் குறைந்துள்ளது.நடப்பு 2012–13 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி உற்பத்தி 3.16 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2012 செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த கடந்த பருவத்தில் உற்பத்தி 3.14 லட்சம் டன்னாக இருந்தது.

சர்வதேச சந்தையில் தேவைப்பாடு குறைந்ததாலும், விலை சரிவடைந்ததாலும் 2012–ஆம் ஆண்டில் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 9.15 சதவீதம் குறைந்து 3.10 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது என இந்திய காபி வாரியம் தெரிவித்துள்ளது. இது, 2011–ஆம் ஆண்டில் 3.41 லட்சம் டன்னாக இருந்தது.

மதிப்பின் அடிப்படையிலும் சென்ற ஆண்டை விட காபி ஏற்றுமதி சற்றே குறைந்துள்ளது. சென்ற ஆண்டில் காபி ஏற்றுமதி வாயிலாக ரூ.4,788 கோடி கிடைத்தது இது, நடப்பு ஆண்டில் ரூ.4,707 கோடி என்ற அளவில் உள்ளது. எனினும் ரோபஸ்டா ரக காபியை பொறுத்தவரை கடந்த ஆண்டை காட்டிலும் ஓரளவு நல்ல விலை கிடைத்துள்ளது என காபி வாரியம்

தெரிவித்துள்ளது.இவ்வாண்டில் 1.57 லட்சம் டன் ரோபஸ்டா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் 18 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. அராபிகா ஏற்றுமதி 57,834 டன்னாக உள்ளது. உலக சந்தையில் அராபிகா விலை வீழ்ச்சியடைந்ததால் காபி ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் குறைந்துள்ளது.நடப்பு 2012–13 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி உற்பத்தி 3.16 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2012 செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த கடந்த பருவத்தில் உற்பத்தி 3.14 லட்சம் டன்னாக இருந்தது.